(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவிருந்து, கணக்காளரொருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவரான தனி யாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையதான கணக்காளர்கள் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

ஆண்டறிக்கை.

**11.** (1) கூட்டுத்தாபனம் ஒவ்வொரு நிதியாண்டிற்கும் அதன் செயற்பாடுகளின் அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், சமூகசேவைகள் எனும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சு செயலாளருக்கும் 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புகள் (பதிவுசெய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் பதிவாளருக்கும் ஆண்டின் ஆறு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் கணக்குகளின் கணக்காய்வு அறிக்கையுடன் சேர்த்து அத்தகைய அறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) நிதியாண்டின்போது கூட்டுத்தாபனத்தால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பணங்களுடன் தொடர்பாகத் தனிவேறான கணக்கொன்று (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

பேரவையினால் செலுத்தப்படவுள்ளனவும் பேரவைக்குச் செலுத்தப்படவுள்ளனவுமான கடன்கள்.

**12.** இச்சட்டம் தொடங்குகின்ற திகதிக்கு நேர்முந்திய நாளன்றுள்ள பேரவையின் எல்லாத் தனிசுகளும், பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று பேரவைக்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்பாலதான ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.

